செய்வதற்கான செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உண்டா? அப்படியானால், பருத்தியை உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு, விளைவிக்கக்கூடியவர்களுக்கு மானியம் கொடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உண்டா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் உங்கள் கேள்வி, பருத்தியைத் தாக்கும் கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தது. ஆனால், நீங்கள் பருத்தி உற்பத்தியை அதிகரிப்பது குறித்து கேட்கிறீர்கள். அதற்குத் தனிக் கேள்வி போடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு சவால் விடுகிற முறையில் நீர் நிலைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற ஆகாயத் தாமரைச் செடிகளை ஒழித்துக் கட்டுவதற்கும், ஏற்கெனவே இந்த அவையிலே அறிவிக்கப்பட்ட பார்த்தீனியம் செடிகளை ஒழித்துக் கட்டுவதற்கும் அரசு முழுமையான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கும் தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

33—

நியாய விலைக் கடை

*1147—**திரு. கே.பி. கந்தன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 பிப்ரவரி 3]

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, உத்தண்டி ஊராட்சி, நைனார் குப்பம் பகுதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உத்தண்டி ஊராட்சியில் உள்ள KG 005 சோழிங்கநல்லூர் நியாய விலைக் கடையில் 1,089 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இதில் நைனார்குப்பம் பகுதி மக்களின் 279 குடும்ப அட்டைகளும் அடங்கும். இப்பகுதிவாழ் மக்களின் நலன் கருதி, மேற்படி தாய்க் கடையிலிருந்து 279 குடும்ப அட்டைகளைப் பிரித்து, நைனார்குப்பத்தில் ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடத்தில் புதிய பகுதிநேரக் கடை மார்ச் 2012-க்குள் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.*

திரு. கே.பி. கந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது வணக்கத்தையும், பணிவையும் தெரிவித்துக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட உத்தண்டியில் உள்ள நைனார்குப்பம் பகுதி மக்களின் நலன் கருதி, 279 குடும்ப அட்டைகளைப் பிரித்து நைனார்குப்பம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட தரமணி பகுதியில் இரண்டு நியாய விலைக் கடைகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் உள்ளன. அவற்றைக் கூடிய விரைவில் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அதிவிரைவில் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

பாலம்

***129—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையத்திலிருந்து நடுப்புணி செல்லும் சாலையிலுள்ள பழைய பாலத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொள்ளாச்சி வட்டம், வடக்கிபாளையத்திலிருந்து நடுப்புணி செல்லும் சாலையிலுள்ள பழைய பாலத்தைப் புதுப்பித்துக் கட்டும்